Weekly School Department of Education,Sabaragamuwa Province

# அலகு 9 வெப்பமும் அதன் விளைவுகளும்

நன்கு சூரிய ஒளி படும் இடத்தில் நின்றிருந்தால் உங்களது தோல் சூடாவதை நீங்கள் உணர்வீர்கள் . எல்லா இடங்களிலும் அவ்வாறு சமனான வெப்பத்தை உணரமாட்டீர்கள் என்பதை கீழ்வரும் செயற்பாட்டின் மூலம் அறிந்து கொள்ளுங்கள்

செயற்பாடு 9 –1

வெப்பமானி ஒன்றின் மூலம் கீழ்வரும் இடங்களுக்குச் சென்று வெப்பநிலையை அளந்து குறித்துக் கொள்ளுங்கள்

| | இடம் | வெப்பநிலை |
|---|---|---|
| 01 | நன்றாக சூரிய ஒளிபடும் இடம் | |
| 02 | பெரிய மரத்தின் அடி | |
| 03 | ஓடும் நீர் | |
| 04 | ஓர் இடத்தில் தேங்கியுள்ள நீர் | |
| 05 | உலர்ந்த மண்ணின் உள்ளே | |
| 06 | ஈரமான மண்ணின் உள்ளே | |
| | | |







- மனிதனால் அதிக குளிரான,அதிக வறட்சியான பிரதேசங்களில் வாழ முடியாது மனிதனின் சராசரி உடல் வெப்ப நிலை 37 பாகை செல்சியஸ் ஆகும்
- எனினும் பாம்பு ,தவளை, ஓணான்,பூச்சி போன்ற விலங்குகள் சூழல் வெப்ப நிலைக்கு ஏற்ப தமது உடல் வெப்ப நிலையை மாற்றிக் கொள்ளக் கூடியன

வினாக்கள்

1 தமது உடல் வெப்ப நிலையை மாறாது பேணிக்கொள்ள விலங்குகள் கொண்டுள்ள இசைவாக்கங்கள் 2 தருக

2 எமது பிரதான இயற்கை வெப்ப முதல் எது ,?

3 வீடுகளில் நாம் வெப்பத்தைப் பெற்றுக் கொள்வதற்காக பயன்படுத்தும் எரிபொருள்கள் எவை ?

- செயற்பாடு 9.2 இல் ஈடுபட்டு வெப்பத்தைப் பிறப்பித்து பார்க்கவும்
- பெற்றோரின் உதவியுடன் செயற்பாடு 9.3 இல் ஈடுபட்டு சூரிய நீர் வெப்பமாக்கி ஒன்றை அமைத்து அதன் செயற்பாடுகளை கண்டறிக
- வீடுகளில் மின் சாதனங்களைப் பயன்படுத்தியும் வெப்பத்தைப் பிறப்பிக்கலாம் அவ்வாறான சாதனம் ஒன்றைப் பரீட்சித்து அதில் காணப்படும் வெப்பச் சுருள் எனும் அமைப்பை செயற்பாடு 9.4 இல் ஈடுபட்டு பரீட்சிக்குக